செ.வெ.எண்: 43 நாள்: 18.11.2021

பத்திரிக்கைச் செய்தி

## சமையல் எரிவாயு வழங்குவதை சீர்படுத்துவது தொடர்பான நுகர்வோர் குறைதீர் கூட்டம்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் எரிவாயு நுகரவோர் குறைதீர் கூட்டம் **மாவட்ட வருவாய் அலுவலர்** அவர்களின் தலைமையில் எதிர் வரும் **24.11.2021 அன்று மாலை 5.00** மணியளவில் நாகப்பட்டினம் **மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில்** நடைபெற உள்ளது. நாகப்பட்டினம் மாவட்டத்தில் எரிவாயு உருளைகள் பதிவு செய்து வழங்குவதில் காணப்படும் குறைபாடுகள் நுகரவோர் பதிவு செய்த புகார்களின் மீது நடவடிக்கை எடுப்பதில் எரிவாயு ஏஜெண்டுகளின் செயல்பாடுகள் தொடர்பாகவும், எரிவாயு உருளைகள் நுகர்வோருக்கு சீரான முறையில் வழங்குதல் தொடர்பான ஆலோசனைகளையும் அனைத்து எரிவாயு நுகர்வோர் அமைப்பினர் கொண்ட ஒருங்கிணைப்பு கூட்டத்தில் எரிவாயு நுகர்வோர் நேரில் தெரிவித்துக் கொள்ளலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்.அ.அருண்தம்புராஜ் இ.ஆ.ப., அவர்களால் தெரிவிக்கப்படுகிறது.

**செய்தி வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், நாகப்பட்டினம்.**